## "இலங்கையின் பொருளாதார செயற்திறனில் வீதி அபிவிருத்தியின் பங்களிப்பினை பகுப்பாய்வு செய்தல் - யுத்தத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியிலிருந்தான சான்றாதாரங்கள்"

**Supervisor**
*Mrs. AR. Sithy Jesmy,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Mr. MHM. Rozan,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

### ஆய்வுச் சுருக்கம்

இன்று உலகலாவிய ரீதியில் பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான ஒரு நிபந்தனையாக வீதி உட்கட்டமைப்பு அபிவிருத்தியனை நாடுகள் உணர்ந்துள்ளன. இதற்காக உலக நாடுகள் பெருமளவு முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றன. இந்த வகையில் இலங்கையிலும் அன்மைக் காலமாக வீதி உட்கட்டமைப்பு அபிவிருத்தி மீது அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. பொருளாதார அபிவிருத்திக்கு வீதி வலையமைப்பு முக்கியமானது என்பது உணரப்பட்டதன் காரணமாக, அரசாங்கமானது வெளிநாடடு நிதியளிப்பைக் கொண்டு துரித அபிவிருத்தித்திட்டம் ஒன்றை புதிதாக ஆரம்பித்துள்ளது. (பொருளியல் நோக்கு, Nov/Dec, 2011). மேலும் இலங்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் போக்குவரத்து துறையின் பங்களிப்பு முறையே 2010 யில் 11.5% உம் 2011 யல் 11.8% உம் ஆக காணப்பட்டது. (தேசிய போக்குவரத்து புள்ளிவிபரவியல் அறிக்கை 2010/2011).

அன்மைக் காலமாக இலங்கை பொருளாதார வளர்ச்சியில் என்றுமில்லாதவாறு சுசந்திரத்திற்குப் பின்னர் மிக உயர்ந்த பொருளாதார வளர்ச்சி வீதத்தினை 2010 யில் 8.0% யினையும், 2011 யில் 8.3% அடைந்து கொண்டது. (தேசிய போக்குவரத்து புள்ளிவிபரவியல் அறிக்கை 2010/2011) இந்த வகையிலான பொருளாதார வளர்ச்சி வீதத்தின் அடைவதற்க்கு காரணம் யுத்ததுக்கு பின்னரான இலங்கையில் மேற்க் கொள்ளப்பட்டு வருகின்ற வீதி உட்கட்டமைப்பு அபிவிருத்தியே காரணம் என பொதுவாக கூறப்படுகின்றது.

உற்பத்தித் துறைக்கான மூலப் பொருட்களை உரிய நேரத்தில் கொண்டு செல்லவும், உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு கொண்டு செல்லவும் விரைவான போக்குவரத்து இன்றியமையாததாகும். இதற்கு போதுமான வீதி அபிவிருத்தி இடம் பெறல் வேண்டும். பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான ஏனைய காரணிகளை தூண்டுவதற்கு ஒரு உந்துசக்தியாகவும் வீதி அபிவிருத்தி காணப்படுகின்றது. பொருளாதார அபிவிருத்திக்கு வீதி அபிவிருத்தி ஒரு தேவைப்பாடாக இருப்பினும், வீதி அபிவிருத்தி மட்டுமே பொருளாதார அபிவிருத்தியாக அமையாது இதற்கு அதனோடு இணைந்த வேறு காரணிகளும் தேவையாக உள்ளது. புதிய முதலீடுகளை கவருவதற்கும், உற்பத்தி பெருக்கத்திற்க்கும் வீதி அபிவிருத்தி ஒரு முக்கிய காணியாகக் காணப்படுகின்றது. புதிய முதலீட்டாளர்கள் நாட்டுக்குள் அல்லது பிரதேசத்துக்குள் உள்வருவதற்க்கும், தனது உற்பத்தி நடவடிக்கைகளை நகர்த்துவதற்க்கும் வீதி அபிவிருத்தி மிக முக்கிமாக காணப்படுகின்றது.

இந்தவகையில் இலங்கையில் யுத்ததுக்கு பிற்பட்ட காலப்பகுதியின் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட வீதி அபிவித்தி திட்டங்கள் பொருளாதார அபிவிருத்தியில் எத்தகைய பங்களிப்பினை வழங்கியுள்ளது என்பதனை கண்டறிவது இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வானது, இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாக கொண்டு

காணப்படுகின்றது. அந்த வகையில் மத்திய வங்கி ஆண்டறிக்கைகள், வீதி அபிவிருத்தி திணைக்கள அறிக்கைகள், இலங்கை போக்குவரத்து குறிகாட்டி அறிகைகள், பத்திரிகைகள், இணையத்தளங்கள் என்பன தரவு மூலங்களாக கொள்ளப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக வரைபட முறை, விவரணப் புள்ளிவிபரவியல், பிற்செலவு முறை என்பன பயன்படுத்தப்படவுள்ளன. SPSS மென் பொருள் இதற்காகப் பயன்படுத்தப்படவுள்ளன. இவ்வாய்வின் மூலம் முக்கிய முடிவாக வீதி உட்கட்டமைப்பு அபிவிருத்தியானது பொருளாதார அபிவிருத்தி மீது நேர்கனிய தாக்கத்தை கொண்டுள்ளது என்பது முடிவாக அமைந்துள்ளது.

**Key words**: வீதி அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு, வீதி வலையமைப்பு.